பத்திரிக்கைச் செய்தி

ந.க.பி4/1419/2020 நாள்:11.02.2021

# வட்டாட்சியர் அலுவலகம், இராஜசிங்கமங்கலம்

இராமநாதபுரம் மாவட்டம், இராஜசிங்கமங்கலம் வட்டத்தில் காலியாக உள்ள கிராமஉதவியாளர் பணிகளுக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள்.25.02.2021 பிற்பகல் 05.00 மணி வரை இராஜசிங்கமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்குமாறு வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | நேரடிநியமனபதவிவிபரம் | ஊதியம் ஏற்றமுறை | காலிப்பணியிடஎண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கிராமஉதவியாளர் | ரூ.11100-35100 நிலை-6 (சிறப்புநிலைஊதியவிகிதம்) Rs.11100-35100 Level-6 (Special Time Scale Of Pay) | 11 |

**2.நிபந்தனைகள்:**

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின் போது அரசு பணியாளர்கள் தேர்வுக்குப்பின்பற்றப்படும் வகுப்பு வாரி சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| வ. எண் | வருவாய் கிராமத்தின் பெயர் | பணியிடஎண்ணிக்கை | இனச்சுழற்சிஎண் மற்றும் விபரம் |
|---|---|---|---|
| 1. | 04.ஆனந்தூர் | 1 | பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) |
| 2. | 08.கொக்கூரணி | 1 | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்)(ஆதரவற்ற விதவை பெண்) |
| 3. | 18.ஓடைக்கால் | 1 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர்மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை பெற்றவர்) |
| 4. | 20.குலமயாணிக்கம் | 1 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) |
| 5. | 24.ஊரணங்குடி | 1 | பொதுப்போட்டி(ஆதரவற்ற விதவை பெண்) |
| 6. | 25.கலங்காப்புலி | 1 | ஆதி திராவிடர் (முன்னுரிமை பெற்றவர்) |
| 7. | 26.பாரனூர் | 1 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (ஆதரவற்ற விதவை பெண்) |
| 8. | 28.பெத்தார் தேவன்கோட்டை | 1 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (ஆதரவற்ற விதவை பெண்) |
| 9. | 31.தும்படைக்காகோட்டை | 1 | பொதுப்போட்டி (முன்னுரிமையற்றவர்) |
| 10. | 37.துத்தியேந்தல் | 1 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர) (முன்னுரிமையற்றவர்) |
| 11. | 38.வலமாவூர் | 1 | பொதுப்போட்டி (முன்னுரிமையற்றவர்) |

2. நியமனத்தின் போது தெரிவு செய்யப்பட்ட தகுதியும், தகுதியான போதிய பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினைச் சார்ந்த பிற விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.
3. நியமனத்தின் போது தெரிவு செய்யப்பட்ட தகுதியும், தகுதியும் வாய்ந்த முன்னாள் இராணுவத்தினர் கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினைச் சார்ந்த பிற தகுதியுடைய விண்ணப்பதாரர்களைக்கொண்டு நிரப்பப்படும்.
4. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் செய்யும் வருவாய் கிராமத்திற்கு 5 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் வசிக்கும் முகவரியைகொண்டவராக இருக்கவேண்டும்.

**3.தகுதிகள்:**

**அ) வயது (01.07.2020 அன்றுவயது)**

1) விண்ணப்பதாரர்கள் 21 வயதுபூர்த்தி அடைந்தவர்களாக இருக்கவேண்டும்.
2) விண்ணப்பதாரர்கள் 01.07.2020 அன்றுகீழ்க்கண்டவயதினைப் பூர்த்திசெய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1) | பொதுபிரிவினர்(OC) | 30 வயது |
| 2) | இதர அனைத்து வகுப்பினர் | 35 வயது |
| 3) | மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்குஅரசாணைப்படிவயதுவரம்புவிலக்களிக்கப்படும். | |

**ஆ) கல்வித்தகுதிகள்:**

விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**இ) இதரதகுதிகள்:**

1) விண்ணப்பதாரர்கள் இந்தஅறிவிப்புவெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப்படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்கவேண்டும்.
2) மிதிவண்டி ஓட்டத்தெரிந்திருக்க வேண்டும்.

**4.தெரிவு முறை:**

மேற்படி காலிப்பணியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நல அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகிய அனைத்திற்கும் நேர்முகத்தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடங்களுக்கான நபர்கள், நேர்முகத்தேர்வு மற்றும் எழுத்து தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் வகுப்புவாரி சுழற்சிக்கு உட்பட்டும், காலிப்பணியிட எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு கட்டாயம் முகக்கவசம்(MASK) அணிந்து வருகை புரிய வேண்டும். நேர்முகத்தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். நேர்முகத்தேர்வு சமூக இடைவெளி(Social Distance) பின்பற்றி நடைபெறும். முழுவதுமாக பூர்த்தி செய்யப்படாத (அல்லது) அனைத்துச் சான்றிதழ்களும் இணைக்கப்படாத (அல்லது) நிர்ணயிக்கப்பட்ட வயதினைக் கடந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித அழைப்பாணையோ, இது குறித்த எவ்விதத் தகவலோ வழங்கப்படமாட்டாது.

**)விண்ணப்பத்துடன் இணைத்துஅனுப்பவேண்டிய இணைப்புகள்:**

விண்ணப்பதாரர்கள் தங்கள் பெயர், முழு முகவரி,பிறந்ததேதி,மதம்,இனம்,கல்வித்தகுதி,முன்னுரிமைகோருவதற்கானசான்றிதழ் உள்ளிட்ட விபரங்களை ஒரு வெள்ளைத்தாளில் தட்டச்சு செய்தோ அல்லது எழுத்தால் எழுதியோ மற்றும் கடவுச்சீட்டு அளவுப் புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியும், மற்றொரு புகைப்படத்தினை இணைத்தும் தகுதியான சான்றுகளின் நகலுடன் அனுப்பவேண்டும். அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது.

**6) நேர்முகத்தேர்வு:**

நேர்முகத்தேர்வுக்கான அழைப்புக்கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட தபால் முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்துச் சான்றிதழ்களின் அசல் மற்றும் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும். நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும் இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது .நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது. நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளும் தேர்வர்கள், இவ்வலுவலகத்திலிருந்து நேர்முகத்தேர்விற்கு அனுப்பப்படும் அழைப்பாணையைக்கட்டாயம் நேர்முகத்தேர்வன்று கொண்டு வர வேண்டும்.

**7) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப்பெறுதல்:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் இராஜசிங்கமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அஞ்சல் வழி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வட்டாட்சியர்,இராஜசிங்கமங்கலம்-623525 என்றமுகவரிக்கு 25.02.2021மாலை 05.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9/2/2021

**வட்டாட்சியர்,**
**இராஜசிங்கமங்கலம்**

9/2/2021

மாதிரி படிவம்

## இராமநாதபுரம் மாவட்டம் இராஜசிங்கமங்கலம் வட்டம் கிராம உதவியாளர் பணியிடத்திற்கான மாதிரி விண்ணப்ப படிவம்

Pass port size photo

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தகப்பனார் பெயர்/கணவர் பெயர் | : | |
| 3. | இருப்பிட முகவரி | : | |
| 4. | கைப்பேசி எண் | : | |
| 5. | கல்வித்தகுதி (சான்றுடன்) | : | |
| 6. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 7. | ஆதார் எண் | : | |
| 8. | சாதி/மதம் (சான்றுடன்) | : | |
| 9. | மனுதாரர் மாற்றுத்திறனாளி (ஆம்/இல்லை) ஆம் எனில் சான்று | : | |
| 10. | மனுதாரர் ஆதரவற்ற விதவை (ஆம்/இல்லை) ஆம் எனில் அதற்கான சான்று | | |

**நாள்:** **விண்ணப்பதாரர் கையொப்பம்**

**இடம்:**